10. Thiru P. Padmanabhan.
11. Thiru C. Pandurangam.
12. Thiru C. V. Velappan.

168. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (vide names below) :—

As on 31st March 1973—

1. Thiru M. Gopal.
2. Thiru S. Nallasamy.

இணைப்பு I

425ஆம் பக்கத்தில் வெள்ளிக் குறியிட்ட வினா 626-க்கு விடை)

(*a*) Rs. 69·68 crores (gross).

The amounts received and repaid during the period from 1967–68 to 1969–70 are as detailed below :—

	Receipts.	Repayments.	Net Balance.
		(RS. IN CRORES.)	
1967–68	10·72	9·41	1·31
1968–69	17·49	14·95	2·54
1969–70	41·47	21·82	19·65
	69·68	46·18	23·50

The amount outstanding is a fluctuating figure since it is against stocks of foodgrains, fertilisers, etc. After deducting the repayments made during these years, the net receipts amount to Rs. 23.50 crores only. These are covered by stocks of foodgrains and fertilisers.

(*b*) and (*c*) Rate of Interest, mode of repayment and details thereof.

I. Rate of Interest—

(i) Food Grains—

(*a*) *State Bank of India/State Bank of Travancore*—

From 28th March 1966 to 11th March 1968—7½ per cent.

From 12th March 1968 to 10th April 1970—7 per cent.

From 11th April 1970 to 8th January 1971—7½ per cent.

From 9th January 1971 to date—8½ per cent.

(b) *Punjab National Bank*—

(Food Grains) (Sugar)

From 9th June 1970 to 8th January 1971—7½ per cent. Up to 31st May 1970—7 per cent.

From 9th January 1971 to date 8½ per cent.

From 1st June 1970 to 8th January 1971—7½ per cent.

From 9th January 1971 to date 8½ per cent.

(ii) *Fertilisers*—

State Bank of India—

Prior to 3rd April 1970—7 per cent.

3rd April 1970 to 8th January 1971—8 per cent.

9th January 1971 to date—9 per cent.

II. *Mode of Repayment*—

Cash Credit is secured from the Commercial Banks on 90 per cent of the value of foodgrains, 80 per cent of the value of sugar and full value of fertiliser held on Government account.

As the loans are being obtained on hypothecation of stocks of foodgrains and fertilisers, the repayment will be made as and when the value of the stocks decreases on account of sales, i.e., when the value of stocks held on Government account decreases there will be repayment and when it increases additional loans will be obtained from the banks. The repayment or obtaining of additional loans are made on the basis of the value of stocks held at the end of each month.

1973 ஏப்ரல் 5]

விடை: (அ) ரூ. 69.68 கோடி (பெரு மொத்தக்) கடன் வாங்கப்பட்டது.

1967—68 முதல் 1969—70 வரையுள்ள கால அளவில் பெறப்பட்ட, திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன் தொகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	வரவுகள்.	திருப்பிக் கொடுத்த தொகைகள்.	நிகர நிலுவை.
	(ரூபாய் கோடியில்.)		
1967–68	10·72	9 41	1·31
1968–69	17·49	14·95	2·54
1969–70	41·47	21·82	19·65
	69·68	46·18	23·50

உணவு தானியங்கள், இரசாயன உரங்கள் முதலியவற்றிற்கு இருப்பின் பேரில் கடன் பெறப்படுவதால், கடன் பாக்கித் தொகை மாறுபடும் தன்மையது. இந்த ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளைக் கழித்துக் கொண்ட பிறகு, நிகர வரவு ரூ. 23.50 கோடியாக மட்டுமே உள்ளது. இதற்கு ஈடாக உணவு தானியங்கள், இரசாயன உரங்களின் இருப்பு உள்ளது.

(இ), (உ): வட்டி வீதம், திருப்பிச் செலுத்தும் முறை, அவற்றின் விவரம்.

I. வட்டி வீதம்.

1. உணவு தானியங்கள்.

(A) இந்திய ஸ்டேட் வங்கி/திருவாங்கூர் ஸ்டேட் வங்கி

28-3-1966 முதல் 11-3-1968 வரை	7½ சதவீதம்.
12-3-1968 முதல் 10-4-1970 வரை	7 சதவீதம்.
11-4-1970 முதல் 8-1-1971 வரை	7½ சதவீதம்.
9-1-1971 முதல் நாளது தேதிவரை	8½ சதவீதம்.

[1973 ஏப்ரல் 5

(B) பஞ்சாப் நேஷனல் வங்கி

(உணவு தானியங்கள்.)		(சர்க்கரை.)	
9-6-1970 முதல் 8-1-1971 வரை.	7½ சதவீதம்.	31-5-1970 வரை	7 சதவீதம்.
9-1-1971 முதல் நாளது தேதி வரை.	8½ சதவீதம்.	1-6-1970 முதல் 8-1-1971 வரை.	7½ சதவீதம்.
		9-1-1971 முதல் நாளது தேதி வரை.	8½ சதவீதம்.

(2) இரசாயன உரங்கள்.

இந்திய ஸ்டேட் வங்கி.

3-4-1970-க்கு முன்பு	*7 சதவிதம்.*
3-4-1970-லிருந்து 8-1-1971 வரை	*8 சதவிதம்.*
9-1-1971-லிருந்து நாளது தேதிவரை	*9 சதவிதம்.*

II. கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை.

அரசுக் கணக்கில் உள்ள உணவு தானியங்களின் மதிப்பில் 90 சதவிதமும், சர்க்கரையின் மதிப்பில் 80 சதவிதமும், இரசாயன உரத்தின் மதிப்பைப் பொறுத்தவரை அதற்குச் சமமான தொகை முழுவதும் வணிக வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது.

உணவு தானியங்கள், இரசாயன உரங்கள் இருப்புகளின் அடைமானத்தின் பேரில் கடன்கள் பெறப்பட்டு வருவதால், சரக்குகள் விற்பனை காரணமாக சரக்கு இருப்புகளின் ரொக்க மதிப்பு குறையும்போதெல்லாம் அதாவது, அரசுக் கணக்கிலுள்ள இருப்புகளின் ரொக்க மதிப்பு குறையும்போது கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்; இருப்புகளின் ரொக்க மதிப்பு கூடும் போதெல்லாம், வங்கிகளிடமிருந்து கூடுதல் கடன்கள் பெறப்படும். ஒவ்வொரு திங்கள் முடியும் காலத்தில் உள்ள இருப்புகளின் ரொக்க மதிப்பின் அடிப்படையில், கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்படுகிறது அல்லது கூடுதல் கடன் பெறப் படுகிறது.